பக்கங்கள் 22+ 03

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆடி 24 சனிக்கிழமை 09.08.2025 | அதிர்வு 009

## 7 வயது சிறுவன் தீ விபத்தில் பலி!

இரத்தினபுரி – பலாங்கொடை, தெஹி கஸ்தலாவ, மஹவத்த பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள் ளார்.

02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# முல்லைத்தீவில் இராணுவத்தால் தாக்கப்பட்டு மாயமான இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு!

## துரித விசாரணைக்கு ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

(பா.சதீசன், விஜயரத்தினம் சரவணன்)

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இராணுவத்தால் தாக்கப்பட்டுக் காணாமல்போய் தேடப்பட்டு வந்த இளம் குடும் பஸ்தர் முத்துஐயன்கட்டுக் குளத்தில் 02












## முல்லைத்தீவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து இன்று சனிக்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் பொது மக்களிடம் உடனடியாக வாக்குமூலங்களைப் பெறுவதுடன், துரிதகதியில் விசாரணைகளை மேற்கொண்டு, குற்றத்தில் ஈடுபட்ட இராணுவத்தினருக்கு எதிராக மிகக் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நேற்றுமுன்தினம் இராணுவத்தால் தாக்கப்பட்டுக் காணாமல்போன நிலையில் தேடப்பட்டு வந்த முல்லைத்தீவு – ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஐயன்கட்டு இடதுகரை, ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த 32 வயதான எதிர் மன்னசிங்கம் கபில்ராஜ் எனும் இளம் குடும்பஸ்தர் முத்துஐயன்கட்டு குளத்தில் இருந்து இன்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி நபர் உட்பட முத்துஐயன்கட்டு இடதுகரை, ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த ஐவர், முத்துஐயன்கட்டுக் குளத்துக்கு அண்மைய பகுதியில் அமைந்துள்ள 63ஆவது படைப் பிரிவு இராணுவ முகாம் இராணுவத்தினரால் நேற்றுமுன்தினம் இரவு தாக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி நபர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தை அறிந்து அப்பகுதி மக்கள் குறித்த பகுதிக்குச் சென்றபோது, ஓர் இளைஞரை இராணுவத்தினர் மிகக் கொடூரமாகத் தாக்கிக் கொண்டிருந்ததாக நேரில் பார்வையிட்ட ஊர் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இராணுவத்தால் தாக்கப்பட்ட இளைஞரை ஊர் மக்கள் காப்பாற்றச் சென்றபோது அவர்களையும் இராணுவத்தினர் தாக்க முற்பட்டுள்ளதாக மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து ஊர் மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் இடம்பெற்ற பலத்த முரண்பாட்டையடுத்து, இராணுவத்தினர் இளைஞரை ஊர் மக்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் தாக்கப்பட்ட மேற்படி இளைஞர் முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்நிலையில் இராணுவத்தால் தாக்கப்பட்ட ஒருவர் காணாமல்போயிருந்தார்.

இவ்வாறு காணாமல்போயிருந்த நபரை ஊர் மக்கள் இணைந்து முத்துஐயன்கட்டுக் குளத்தில் தேடியதுடன், நேற்று வெள்ளிக்கிழமை முத்துஐயன் கட்டுப்பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

இத்தகைய சூழலிலேயே இராணுவத்தால் தாக்கப்பட்டு காணாமல்போயிருந்த நபர் இன்று சனிக்கிழமை காலை முத்துஐயன்கட்டுக் குளத்தில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

குறிப்பாக முத்துஐயன்கட்டு இடதுகரை, ஜீவநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞர்களுக்கு முத்துஐயன்கட்டுப் பகுதில் உள்ள இராணுவத்தினர் குறைந்த விலையில் எரிபொருள் உள்ளிட்ட பொருட்களை வழங்கி வந்ததாகவும், இவ்வாறு இராணுவத்தால் இளைஞர்களுக்குப் பொருட்கள் வழங்கப்பட்டு வந்த பின்னணியிலேயே இராணுவத்தால் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளதுடன், இந்தக் கொலைச் சம்பவமும் இடம்பெற்றுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறான சூழலில் சடலம் மீட்கப்பட்ட குறித்த இடம் குற்றப் பிரதேசமாக அடையாளப்படுத்தப்பட்டு, சடலத்தை மீட்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அந்த இடத்துக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீபன் வருகை தந்திருந்தார். நீதிவானின் முன்னிலையில் சடலம் குளத்தில் இருந்து மீட்கப்பட்டதுடன், தடயவியல் பொலிஸாரால் தடயவியல் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காகக் கிளிநொச்சிக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

சடலம் மீட்கப்பட்ட இடத்துக்கு வருகை தந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இராணுவத்தின் அடாவடிச் செயற்பாடுகள் குறித்து நீதிபதியிடம் முறையிட்டார். அதேவேளை மக்களாலும் இதன்போது நீதிபதியிடம் முறையீடுகள் செய்யப்பட்டன.

மக்களின் முறைப்பாடுகளை போலிஸாரிடம் வாக்குமூலமாகப் பதிவு செய்யுமாறு நீதிபதியால் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சூழலில் இந்த விவகாரம் தொடர்பில் உடனடியாக மக்களிடம் வாக்குமூலங்களைப் பெறுமாறும், குற்றச் செயல்களில்ஈடுபட்டஇராணுவத்தினருக்கு எதிராக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளமாறும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இதன்போது பொலிஸாரிடம் வலியுறுத்தினார்.

## 7 வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீ விபத்து இன்று சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தீ விபத்தின் போது வீட்டில் இருந்த மேற்படி சிறுவன் தீக்காயங்களுடன் பலாங்கொடை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# “மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும்” எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு

(எஸ்.நிதர்ஷன்)

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஏற்பாட்டில் மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும் எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் ரில்கோ விடுதியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பல்வேறு தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பல் கலைக்கழக முன்னாள் துணை வேந்தர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகள், ஓய்வுநிலை அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டார்கள்.









# “மாகாண சபை முறைமையும் அதிகாரப் பகிர்வும்” எனும் தலைப்பில் யாழ்ப்பாணத்தில் கருத்தரங்கு









# ஆட்சியைப் பிடிப்பதற்குரிய வேலைத்திட்டம் ஆரம்பமாம்

## மொட்டுக் கட்சி கூறுகின்றது

ஆட்சியைப் பிடிப்பதற்குரிய வேலைத்திட்டத்தை ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சி முன்னெடுத்து வருகின்றது என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்தவர்களில் 95 சதவீதமானோர் நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க மீண்டும் கட்சிக்குத் திரும்பியுள்ளனர்.




உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி வெற்றி பெற்ற தொகுதிகளுக்கு நாமல் ராஜபக்ஷ தற்போது நேரடி விஜயம் மேற்கொண்டு சந்திப்புக்களை நடத்தி வருகின்றார்.

கட்சியைப் பலப்படுத்தி, ஆட்சியைப் பிடிப்பதற்குரிய வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.” - என்றார்.


# களுதாவளையில் கோபாலரெத்தினத்தின் மணிவிழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

**(வி.ரி. சகாதேவராஜா)**

கிழக்கின் மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரி ஓய்வுபெற்ற மூத்ததம்பி கோபாலரெத்தினத்தின் அறுபதாவது அகவை மணிவிழாவும் நூல் வெளியீடும் நாளை ஞாயிற்றுக்கிழமை களுதாவளை கலாசார மண்டபத்தில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது .

ஓய்வுநிலை இலங்கை நிர்வாக சேவை அதிகாரி கலாநிதி சி.அமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரத்ன சேகர கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு அதிதிகளாக கிழக்கு மாகாண பிரதமர் செயலாளர் என்.தலங்கம, மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜே.முரளிதரன், அம்பாறை




மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரம, விவசாய மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் முன்னாள் செயலாளர் க. மகேசன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

மேலும் கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள், முன்னாள் அரச அதிபர்கள், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலர் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

விழாவில் மணிவிழா சிறப்பு மலர் வெளியிட்டு வைக்கப்படும்.

சிறப்பு மலருக்கான ஆய்வுரைகளை கிழக்குப் பல்கலைக்கழக பேராசிரியர் வேலுப்பிள்ளை குணரத்தினம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகள் சங்கத் தலைவர் க.அனிரன் ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

விழாவுக்கு ஆயிரம் பேர் அழைக்கப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண மணிவிழா ஏற்பாட்டுக் குழு தெரிவித்துள்ளது.

# பஸ்ஸீக்குள் கணவனின் கத்திக்குத்து தாக்குதலில் படுகாயமடைந்த மனைவி

பஸ் ஒன்றுக்குள் கணவனின் கத்திக் குத்துக்கு இலக்காகி மனைவி படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று சனிக்கிழமை காலை பதுளை, பண்டாரவளை பிரதான பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்ஸீக்குள் இடம்பெற்றுள்ளது என்று பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.



32 வயதுடைய மனைவியே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார். மேற்படி பெண் பதுளை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனையடுத்துச் சந்தேகநபரான கணவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். குடும்பத் தகராறு காரணமாக இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பண்டாரவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





### காற்றாலை மின் கோபுரம் அமைத்தல், கனிய மணல் அகழ்வுக்கு எதிர்ப்பு:

# மன்னாரில் 7 ஆவது நாளாகவும் தொடர் போராட்டம்

**(எஸ்.ஆர்.லெம்பேட்)**

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி இரண்டாவது கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் மன்னார் பஜார் பகுதியில் தொடர் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இன்று சனிக்கிழமை 7 ஆவது நாளாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் மன்னார் – பேசாலை கிராம மக்கள் கலந்துகொண்டார்கள்.























# மன்னாரில் 7 ஆவது நாளாகவும் தொடர் போராட்டம்

















நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஒழுங்கான திட்டமே அவசியம்

தற்போதைய இலங்கை அரசு சமர்ப்பித்துள்ள கல்விச் சீர்திருத்தம் பற்றிய திட்டம் சர்ச்சைக்குரியதாகவும் விவாதத்துக்குரியதாகவும் மாறியிருக்கும் பின்னணியில், அந்தத் திட்டத்தை நியாயப்படுத்தி பிரச்சாரங்களை முழு அளவில் முன்னெடுத்து வருகிறார் நாட்டின் கல்வி அமைச்சரும் பிரதமருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய. அது அவரது பணி. பொறுப்பு. கடமை.

இந்த விடயங்களை ஒட்டி அவர் சொல்லி இருக்கின்ற ஒரு புள்ளி விவரம் கவனத்திற்குரியதாகி இருக்கின்றது.

2024 ஆம் ஆண்டு கல்வி அமைச்சினால் நடத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், 20,000 மாணவர்கள் பள்ளிக் கல்வியை விட்டு வெளியேறிய போது, அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து எந்தத் தகவலும் இல்லை என்று அவர் தெரிவித்திருக்கின்றார்.

மேலும், பாடசாலைகளுக்குச் செல்லும் சுமார் 80 ஆயிரம் குழந்தைகள் தொடர்ந்து பாடசாலைகளுக்கு வருவதில்லை. ஆண்டுதோறும் மூன்று லட்சம் குழந்தைகள் பள்ளிகளில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களில் சுமார் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் குழந்தைகள் வெவ்வேறு நிலைகளில் பள்ளிக் கல்வியை விட்டு வெளியேறி தொழிற்கல்வி அல்லது தனியார் கல்விக்குள் நுழைகிறார்கள். சுமார் 40 ஆயிரம் பேர் அரசுப் பல்கலைக்கழகங்களில் சேர்க்கப்படுகிறார்கள். ஆனால் மீதமுள்ள பிள்ளைகளுக்கும் அவர்களின் எதிர்காலத்திற்கும் என்ன நடக்கிறது என்பது குறித்து யாருடைய கவனமும் ஈர்க்கப்படவில்லை. புதிய கல்வி சீர்திருத்தங்கள் மூலம் இந்த நிலைமையை மாற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்கின்றார் பிரதமர்.

பாடசாலைக் கல்விக்குள் வருடாந்தம் நுழையும் சுமார் மூன்று லட்சம் மாணவர்களில் பல்லாயிரம் பேர் இடைநடுவில் தகுந்த கல்வி அல்லது வேலைவாய்ப்புக்கான தகைமையை எட்டாத நிலையில் பாடசாலை கல்வியிலிருந்து விலகுவது அல்லது காணாமல் போவது என்பது மிக மோசமான நிலைமையை உருவாக்கும். நாட்டில் பல பிரச்சினைகளை - சமுதாயச் சிக்கல்களை - அது ஏற்படுத்தும்.

நமது பாடசாலைக்கல்வி முறையில், 13 ஆண்டுகள் கல்வி பயின்ற பிறகு பள்ளிகளை விட்டு வெளியேறும் பிள்ளைகள் வேலைவாய்ப்பு உலகில் எளிதில் நுழைய முடியாதுள்ளனர். ஒரு பாடசாலையில் இருந்து பெறப்பட்ட கல்வி ஒரு வேலைக்குச் செல்ல போதுமானதாக இல்லை. குறிப்பாக இந்த நிலைமை நமது பெண்களைப் பாதித்துள்ளது. பெண்கள் பள்ளிகளில் சிறந்த திறன்களைக் காட்டினாலும், வேலைச் சந்தையில் பெண்களின் பங்கேற்பு ஆண்களை விட ஐம்பது வீதம் குறைவாக உள்ளது என்ற விவரங்களையும் நாட்டின் பிரதமர் ஒப்புக் கொள்கின்றார்.

இந்தப் பிரச்சினைகளை - நெருக்கடிகளை - வெற்றிகரமாகத் தாண்டுவதாயின், நமது கல்வி முறை சீர்திருத்தப்பட வேண்டும் என்பதில் இரண்டு கேள்விக்கு இடமில்லை. ஆனால் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தீர்க்கக் கூடிய விதத்தில் இப்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள கல்விச் சீர்திருத்தம் அமைந்துள்ளதா என்பதுதான் கேள்வி. கல்வித்துறை தொடர்பான பிரச்சினைகளை இப்போது விவரமாகப் பட்டியலிடும் நமது கல்வி அமைச்சருமான பிரதமர், இந்த பிரச்சினைகளுக்கு எல்லாம் தீர்வு தமது கல்விச் சீர்திருத்தத் திட்டத்தில் இருப்பதாக வாய்ச்சவடால் கூறுவதில் அர்த்தமில்லை. சம்பந்தப்பட்ட நிபுணத்துவ தரப்புகளோடு - கல்வித்துறை சார்ந்த பங்குதாரர்களோடு - தொழிற்சங்கத்தினரோடு - கலந்துரையாடி, இந்தத் திட்டத்தை ஒழுங்குபடுத்தி முன்னெடுக்க வேண்டும். அதுதான் சரியான முறைமையாக இருக்க முடியும்.



# பல்லாயிரக்கணக்கான பக்தர்களின் பங்கேற்புடன் உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் தீர்த்தோற்சவம்

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த ஆடிவேல் விழா மகோற்சவத்தின் சமுத்திரத் தீர்த்தோற்சவம் இன்று சனிக்கிழமை நடைபெற்றது. இதில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

**(படங்கள்:- வி.ரி. சகாதேவராஜா)**

















# எழுவைதீவு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் விரைவில் தீர்க்கப்படும்!

## குறைகேள் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநர்

எழுவைதீவு மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை எவ்வளவு விரைவாக நிறைவேற்றித்தர முடியுமோ அவ்வளவு விரைவாக நிறைவேற்றித் தருவார் என்றும் சில விடயங்களை அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டின் ஊடாக நடைமுறைப்படுத்த முடியும் என்றும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

எழுவைதீவு மக்கள் குறைகேள் சந்திப்பு எழுவைதீவு விளையாட்டுக்கழக மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. இதன் போது இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த பங்குத்தந்தை,

தற்போதைய ஆளுநர் யாழ். மாவட்டச் செயலராக இருந்த காலத்தில் எழுவைதீவு மக்களுக்கு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்திருந்ததார். அவர் தற்போதும் இந்தப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வந்துள்ளளார். – என்றார்.

கல்விப் பொதுத்தராதர சாதரணதரப் பரீட்சைக்கு உரிய பரீட்சை மண்டபம் எழுவை தீவில் அமைக்கப்படுவதில்லை என மக்கள் தெரிவித்தனர். குறைவான மாணவர் எண்ணிக்கை இருப்பதால் பரீட்சை மண்டபம் அமைக்கப்பட வில்லை. முன்னரும் இதேபோன்ற கோரிக்கை முன்வைக்கப்பட்ட போதும் அதற்கான அனுமதி கிடைக்கப்பெற வில்லை என்று வலயக் கல்விப் பணிப்பாளர் குறிப்பிட்டார். இதன்போது, இந்தப் பிரதேசத்தை விசேடமாக கருதி அதனை நியாயப்படுத்தி மீளவும் கடிதம் அனுப்புமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை ஆளுநர் பணித்தார்.

எழுவைதீவிலுள்ள ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவில் வெளிநோயாளர் பிரிவு மாத்திரமே இயங்குகிறது. அதனை தரம் உயர்த்தி விடுதியுடனான பிரதேச மருத்துவமையாக்கி தரவேண்டும் என மக்கள் கோரினர். அதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி பதிலளித்தார்.

பிரதேசத்திலுள்ள நன்னீர் கிணறுகள் புனரமைப்புச் செய்யப்பட்டால் அதிலிருந்து குடி தண்ணிரைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் மக்கள் கோரினர். கிணறுகள் தொடர்பான பதிவுகளை ஆராய்ந்து வடக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களம் ஊடாக அதனைச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார்.

வலைப்பாடு நன்னீர் கிணற்று வீதி, சேமக்காலை வைத்தியசாலை வீதி ஆகியவற்றின் புனரமைப்புக்கான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. பிரதேச சபை ஊடாக அதனைப் புனரமைப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்கள் ஆளுநரால் வழங்கப்பட்டது.

கருவேலை மரங்களால் பிரதேசத்தின் பனை வளம் அழிவடைவதாகவும் அதனை அழிப்பதற்கான இயந்திரங்களை பிரதேச சபை வழங்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்தனர். அதற்கான உதவிகளை வழங்க பிரதேச சபைக்கு ஆளுநர் பணிப்புரை விடுத்தார். மக்களின் கோரிக்கைக்கு அமைவாக அதனைச் செய்வதற்கு பிரதேச சபையும் இணக்கம் தெரிவித்தது.

அனலைதீவிலிருந்து கடல்நீரை சுத்திகரித்து எழுவைதீவுக்கு குழாய் மூலம் எடுத்து வரப்படும் நிலையில் தற்போது அந்தக் குழாய் கடலில் மிதப்பதாக மக்கள் தெரிவித்தனர். அத்துடன் அதன் ஊடாக போதுமான குடி தண்ணீரைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை எனவும் குறிப்பிட்டனர். எதிர்காலத்தில் எழுவைதீவிலேயே கடல் நீரை சுத்திகரித்து குடிநீராக்கும் செயன்முறையை ஆரம்பிக்குமாறு பொறியியலாளர்களுக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

ஆளுநர், யாழ். மாவட்டச் செயலராக இருந்தபோது கலையரங்குக்கான அடிக்கல் நடுகை செய்து நிதி ஒதுக்கப்பட்டதாகவும் பின்னர் அந்த நிதி இடைநிறுத்தப்பட்டுள்ளமையால், பிரதேசத்தில் ஒரு பொதுமண்டபம் கூட இல்லையென மக்கள் தெரிவித்தனர். குறிப்பாக கிராமிய கலைகளை அரங்கேற்றுவதற்கான அரங்கு இல்லை என்றும் அதற்கான நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு கோரினர். அடுத்த ஆண்டு அதற்கான நிதியைப் பெற்றுத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாக ஆளுநர் பதிலளித்தார்.

பத்திமா சனசமூக நிலையத்தை புனரமைத்தலுக்கான கோரிக்கையும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. எழுவைதீவிலுள்ள குளத்தை தூர்வாருவதற்கும், இதன்போது அள்ளப்படும் மண்ணை, றோ.க.த.க. பாடசாலையில் நீர் தேங்குவதால் அங்கு கொட்டுவதற்கும் இதன் போது இணக்கம் காணப்பட்டது.

கடற்றொழிலாளர்களுக்கு மீன்களைப் பாதுகாப்பதற்கு ஐஸ் உற்பத்தியை மேற்கொள்வதற்கான கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அடுத்த ஆண்டு நிதி ஒதுக்கீட்டில் அதனைப் பெற்றுத் தரக்கூடியதாக இருக்கும் என கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பிரதிநிதிகளால் உறுதியளிக்கப்பட்டது.

கடல் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்கான ஏற்கனவே அமைக்கப்பட்டு அரைகுறையிலுள்ள தடுப்பணையை முழுமைப்படுத்தித் தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அதனை அடுத்த ஆண்டு வீதி அபிவிருத்தித் திணைக்களம் அல்லது உள்ளூராட்சி மன்றம் ஊடாகச் செயற்படுத்தித் தரக்கூடியதாக இருக்கும் என ஆளுநர் பதிலளித்தார்.

மேலும், நங்கூரமிடும் இறங்குதுறை தேவை என மீனவர்கள் கோரிய நிலையில், அடுத்த ஆண்டு அது மேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவரின் இணைப்பாளர் சு.கபிலன் பதிலளித்தார்.

இறங்குதுறையை ஆழப்படுத்தல் மற்றும் கடல்போக்குவரத்தை சீர்செய்தல் ஆகிய விடயங்களை நாரா நிறுவனத்தின் ஊடாக ஆய்வு செய்து அதன் முடிவுக்கு அமைவாக செயற்படுத்த முடியும் என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார்.

ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை தொடர்பிலும் எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தால் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் இறங்குதுறையிலிருந்து உள்ளூர் போக்குவரத்துச் சேவைக்கான எந்தவொரு வாகனங்களும் இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. போக்குவரத்துக்கான வசதிகள் தொடர்பில் எதிர்காலத்தில் ஆராய்வதாகத் தெரி வித்த ஆளுநர், ஆசிரியர் பற்றாக்குறை வெகுவிரைவாக நிவர்த்தி செய்யப்பட வேண்டும் என வலயக் கல்விப் பணிப்பாளரை பணித்தார். குறிப்பாக தீவக வலயத்தினுள்கூட மனித வளங்கள் சரியாக பங்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவில்லை எனத் தெரிவித்த ஆளுநர் அதனை விரைந்து சீர் செய்யுமாறு வலயக் கல்விப் பணிப்பாளரை அறிவுறுத்தினார்.

# தரம் 5 மாணவருக்கு எழுது கருவிகள்




சாவகச்சேரி சக்தி அம்மன் வித்தியாலயம் மற்றும் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை சேர்ந்த தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு எழுதுபொருள்கள் வழங்கப்பட்டன.

வித்தியாலய பழைய மாணவி கமலறஞ்சினியினால் எழுதுபொருருள்களை மாணவர்களுக்கு வழங்கினார்.




# அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் தேர்!



அச்சுவேலி உலவிக்குளம் சித்திவிநாயகர் கோவில் பெருந்திருவிழா ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது. திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்று (08) இடம்பெற்றது.






# ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீட்டு விழா


நியூசிலாந்து, ஒக்லாண்ட் (புரூஉடமயனெ) மாநகரில் ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

"தேசிய சுய நிர்ணயமும் ஐரோப்பிய சிறுபான்மை இனங்களும்", "இலத்தீன் அமெரிக்காவில் தேசிய இன முரண்பாடுகள்", "ஆபிரிக்க தேசிய இனங்களும் சுயநிர்ணய விடுதலையும்", "முரண்பாடுகள் முற்றிய அரபுலகின் தேசிய இனங்கள்", "தென்கிழக்காசிய விடுதலைப் போராட்டங்கள்", "இந்தியாவில் தேசிய இன எழுச்சியும் வீழ்ச்சியும்" ஆகிய ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆறு நூல்கள் வெளியீடு எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளன.

நியூசிலாந்து, ஒக்லாண்ட் மாநகரில் உள்ள மவுண்ட் ரோஸ்கில் போர் நினைவு மண்டபம், 13 ஆவது மே சாலை, மவுண்ட் ரோஸ்கில், ஒக்லாந்து 1051 எனும் முகவரியில் உள்ள மண்டபத்தில் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு சண் வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவில் அறிமுக உரையை மேவின் கொன்ஸ்ரன்ரைன் அவர்கள் உரையாற்றுவார். அத்துடன் நூல்களின் ஆய்வுரைகளை சிவசரவணபன் சர்வேஸ்வரன், பூபாலசிங்கம் பிரதீபன், கௌரிசங்கர் சுதந்திரபாலன், திரு. பிரேம்குமார் கந்தசாமி,



திருமதி. வித்தியா நந்தகுமார் மற்றும் திருமதி. தமிழினி வாமதேவன் ஆகியோர் வழங்குவர்.

ஒக்லாண்ட் மாநகரில் நிகழும் இந் நூல் வெளியீட்டின் ஏற்புரையை ஐங்கரன் விக்கினேஸ்வரா அவர்கள் நிகழ்த் துவார்.





# பொது போக்குவரத்தில் மக்கள் அசௌகரியம்; முறையீடு செய்ய தொலைபேசி இலக்கங்கள்!

ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைய, பொது போக்குவரத்தில் பொது மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்கள் மற்றும் இடர்பாடுகளை முறையிடுவதற்கான இலக்கம் வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் அறிமுகம் செய்யப்பட்டது.

குறித்த 0719090900 இலக்கத்துக்கு குறுந்தகவல் அனுப்ப முடியம். மற்றும் 021 228 5120 என்ற நிலையான தொலைபேசி இலக்கமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த இலக்கங்கள் உள்ளடக்கிய விழிப்புணர்வு ஸ்டிக்கரைப் பஸ்களில் ஒட்டும் நிகழ்வு மாவட்டச் செயலகத்தில் மேலதிக அரச அதிபர் க சிவகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்டச் செயலக பிரதம கணக்காளர் எஸ்.கிருபாகரன், திட்டமிடல் பணிப்பாளர் .இ சுரேந்திரநாதன் மற்றும் உதவி மாவட்டச் செயலாளர் உ. தர்சினி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் இணைய அங்கத்தவர்களுக்குக் கடனுதவி

யாழ். மாவட்ட மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் இணையத்தின் மாவட்டத்தில் சுயதொழில் உற்பத்தியில் ஈடுபடும் பெண்களை ஊக்குவிக்கும் வகையில் குறைந்த வட்டியில் 50 ஆயிரம் ரூபா சுயதொழில் கடன் வழங்கவுள்ளனர்.

இவ்வாறு இன்று யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட மகளிர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் இணையத்தின் செயற்குழு கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

சுயதொழில் உதவிக் கடன் பெற விரும்பும் இணையத்தில் அங்கத்தவராக உள்ள மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் மூலம் விண்ணப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.



# கிழக்கு மாகாண றக்பி போட்டியில் வென்றது திரியாய் தமிழ் வித்தி.

(எஸ்.கீதபொன்கலன்)

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான றக்பி போட்டியில், திரியாய் தமிழ் மகா வித்தியாலய 20 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணி மூன்றாமிடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டது.

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான றக்பி போட்டி கந்தளாய் லீலாரத்ன மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டி நிகழ்வில் திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்ட 20 வயது பெண்கள் அணி கிழக்கு மாகாண மட்டத்தில் மூன்றாமிடத்தினைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தரம் இரண்டு வகுதிக்குரியதும்,150 மாணவ, மாணவிகளைக் கொண்டுள்ளதுமான, அதிகஷ்டப் பிரதேசத்தில் இயங்கும் இந்தப் பாடசாலை இவ்வாறு வெற்றி பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# பொது விளையாட்டுக் கட்டடத் தொகுதியை முல்லைத்தீவில் அமைக்குமாறு கோரிக்கை

## அமைச்சர் சுனில் குமார கமகேவிடம் ரவிகரன் எம்.பி.

**(பா.சதீசன், விஜயரத்தினம் சரவணன்)**



முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது விளையாட்டுக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமககேவிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்ற இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆலோசனைக்குழுக் கூட்டத்திலேயே அமைச்சரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது மாவட்டங்கள்தோறும் இளைஞர்கழக சம்மேளனங்களைத் தெரிவுசெய்யும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. அந்த வகையில் எமது முல்லைத்தீவு மாவட்டத்திலும் இளைஞர்கழக சம்மேளனம் தெரிவு செய்யப்பட்டுள்ளன. பிரதி அமைச்சர் எரங்க குணசேகரவின் பங்கேற்புடன் மாவட்ட இளைஞர் கழகப் பொதுக் கூட்டமும் இடம்பெற்றது. இச்செயற்பாட்டை வரவேற்கின்றேன்.

இருப்பினும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுத்துறைசார்ந்து பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன.

கடந்தகாலத்தில் மாவட்டங்கள்தோறும்அமைக்கப்பட்டபொதுவிளையாட்டுக் கட்டத்தொகுதி முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்படவில்லை.

முல்லைத்தீவு மாவட்டம் கடந்த கால யுத்தத்தால் முற்றாகப் பாதிக்கப்பட்ட ஒரு மாவட்டமாகக் காணப்படுகின்றது. எனவே முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள இளையோர் விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதற்கு சகலவசதிவாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் விளையாட்டுத்துறைசார்ந்து காணப்படுகின்ற குறைபாடுகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது விளையாட்டுக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என்றார்.

இந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பொது விளையாட்டுக் கட்டடத் தொகுதி அமைப்பதுதொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகேவினால் இதன்போது தெரிவித்துள்ளார் என்று குறிப்பிடப்பட்டது.





# சலவை திரவம் தயாரித்தல் தொடர்பில் தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கல்

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமூக சேவைகள் திணைக்களமும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக விதாதா பிரிவும் இணைந்து சலவை திரவம் தயாரித்தல் தொடர்பான தொழில்நுட்பப் பயிற்சிகள் வழங்கும் நிகழ்வை நடத்தின.

பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் இது ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது.

வளவாளராக கிளிநொச்சி மாவட்ட விதாதா உத்தியோகத்தர் ரி.முரளிதரன் கலந்து கொண்டார்.

பயிற்சி நிகழ்வில் உதவிப் பிரதேச செயலர், பிரதேச செயலக விதாதா உத்தியோகத்தர், சமூகசேவைகள் உத்தியோகத்தர், நிடா உத்தியோகத்தர், ஏற்றுமதி பிரிவு உத்தியோகத்தர், சிறு தொழில் முயற்சி பிரிவு உத்தியோகத்தர்கள், மனிதவலு பிரிவின் உத்தியோகத்தர், திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர், மற்றும் 20 பேர் வரையான பயனாளிகள் பங்கு பற்றியிருந்தனர்.









# அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்கள அதிகாரிகள் விசேட சோதனை

(ஹஸ்பர் ஏ.எச்.)

திருகோணமலை மாவட்ட அரச அதிபர் டபிள்யூ.ஜி.எம். ஹேமந்த குமார வழிகாட்டலுக்கு அமைவாக அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் அதிகாரிகளால் நேற்று முன்தினம் (07) திருகோணமலை நகர் பகுதியில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

திருகோணமலை நகரை அண்டிய பகுதிகளான பொதுச் சந்தைகள், அங்காடி வியாபார நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

கிழக்கு மாகாண அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் வீ. விக்னேஷ்வரன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட இந்த சோதனை நடவடிக்கையின் போது, பொலிஸ் அதிகாரிகளின் உதவியுடன் பாவனைக்கு உதவாத தராசுகள், முத்திரையிடப்படாத நிலுவை அளவீட்டுக் கருவிகள் போன்றவற்றை பயன்படுத்தி வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.



# கலாசார மண்டபமும் சந்தை வளாகமும் கிண்ணியாவில் அமைப்பது பற்றி ஆராய்வு

(ஹஸ்பர் ஏ.எச்.)

கிண்ணியா நகரத்துக்கான கலாசார மண்டபம் மற்றும் சந்தை வளாகம் அமைப்பதற்கான சாத்தியம் குறித்தும் அவற்றை அமைப்பதற்கான காணிகள் குறித்தும் ஆராய்வதற்கும் அவற்றுக் கான திட்டங்களையும் திட்ட முன் மொழிவுகளையும் தயாரித்து தொடர்ந் தும் முன் கொண்டு செல்வதற்குமென கலந்துரையாடல் ஒன்று கிண்ணியா நகர சபையின் தவிசாளர் எம்.எம். மஹ்தி தலைமையில் நகர சபை மண் டபத்தில் நடை பெற்றது.

அதற்கு சாத்தியப்பாடான பல காணிகள் குறித்து இங்கு கலந்துரை யாடப்பட்டது. அந்தக் காணிகளைப் பார்வையிட்டு சாத்தியப்பாட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டு அதற்காக 9 பேர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட் டது.

இவ்வறிக்கை தயாரிக்கப்பட்ட பின் னர் கட்டடத்தின் தோற்றம் அதற்கான கட்டமைப்புகள் குறித்துக் கலந்துரை யாடப்பட்டு முன் கொண்டு செல்வதெ னவும் தீர்மானம் பெறப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர் எம்.எச்.கனி, வலய கல்வி பணிப்பாளர் இஸட்.எம்.எம்.முனவ்வரா நளீம், பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.அஜீத் , பிரதி திட்டமிடல் பணிப்பாளர்கள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், பல்கலைக்கழக விரிவு ரையாளர்கள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு உத்தியோகத்தர், கரையோர பாதுகாப்பு பணியாக உத்தியோகத்தர், கட்டடக் கலைஞர்கள், சுற்றுலா பணியக உறுப்பினர், வெடி மருந்துப் பொருள்கள் கட்டுப்பாட்டாளர், கலாச்சார உத்தி யோகத்தர், தொழில்நுட்ப உத்தியோ கத்தர், நகர சபை செயலாளர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவற்கு சுற்றுலா துறை முக்கிய இடம் பிடித்துள்ளது!

## நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவிப்பு

(பொகவந்தலாவ எஸ்.சதீஸ்)

நுவரெலியா மாவட்டத்தை பொறுத் தவரையில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு சுற்றுலா துறை முக்கிய இடம பிடித்துள்ளது என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணன் கலைச்செல்வி தெரிவித்துள்ளார் .

காட்மோர் பகுதிக்கு விஜயத்தினை மேற்கொண்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரி வித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

பொகவந்தலாவ, அக்கரப்பத்தனை, மஸ்கெலியா ஆகிய பிரதேசங்களில் சுற்றுலா துறையின் ஊடாக புதிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க கூடிய வாயாப்புக்கள் அதிகமாக உள் ளன. எதிர்கால வேலைத் திட்டங்க ளையும் முன்னெடுத்து செல்லவிருக் கின்றோம்

காட்மோர் பகுதிக்கான பிரதான வீதி நீண்டகாலமாக சேதமடைந்தது காணப்



படுகிறது. இதனால் இந்த பகுதிக்கு வருகின்ற சுற்றுலா பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆகவே இந்தப் பிரச்சினையை நாங்கள் நுவரெலியா மாவட்ட அபிவிருத்தி கூழு கூட்டத்தில் கலந்துரையாடி இந்த வீதிக்கான நிதியை மாகாண அபிவிருத்தி அதிகார சபையின் ஊடாக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மலையக மக்களுக்கு எமது அரசு வழங்கிய வாக்குறுதிகளைக் கட்டாயம் நிறைவேற்றும். கபரகலை பகுதியில் அனர்த்தத்தால் பாதிக்கபபட்ட மக்கள் கடந்த 05 வருடங்கலாக வீடமைப்பு இல்லாமல் தொழிற்சாலையில் வாழ்ந்து வந்தனர். எமது அரசு வந்த பிறகுதான் கபரகலை மக்களுக்கான வீடமைப்பு திட்டதை ஆரம்பித்துள்ளோம்.

மலையக மக்களுக்கான பிரதான பிரச்சினையாக காணி மற்றும் வீடமைப் புப் பிரச்சினை காணப்படுகிறது. அந்தப் பிரச்சினை சம்பந்தமாகப் பெருந்தோட்ட அமைச்சர் ஊடாகக் கலந்துரையாடி யுள்ளேன்.

மலையக மக்களின் அனைத்து பிரச்சினைகளும் படிப்படியாக தீர்த்து வைபாபதற்கு தேசிய மக்கள் சக்தி அரசு முன்வந்துள்ளது. நோர்வூட் பிரதேச சபையில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் ஊடாக போட்டியிட்டுச் சபைக் குத் தெரிவு செய்யப்பட்ட ஆறு உறுப் பினர்களும் சுயாதினமாக இறங்கு கிறார்கள். ஆகவே அவர்கள் தொடர் பான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கட்சியில் கலந்துரையாடல் இடம் பெற்று வருகிறது. இது தொடர்பாக எமது கட்சி வெகு விரைவாக அறி விக்கும்.– என்றார்.

# மன்னார் தீவை அழிப்பதற்கு கபடத்தனம் கையாளப்படுகிறது

## மன்னார் மக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்து

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் தீவில் காற்றாலை அமைப்பதற்கும் கனியவள மணல் அகழ்வுக்கும் நிறுவனங்கள் தங்கள் வேலைகளுக்கு மக்களின் அனுமதியைப் பெறுவதற்காக கபடத்தனமாக செயல்படுகின்றன. ஆகவே மன்னார் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மன்னார் நகர சபை விஷேட கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மன்னார் நகர சபையின் விசேட அமர்வு வியாழக்கிழமை இடம்பெற்றது.

நகர சபை தவிசாளர் டேனியல் வசந்தன் தலைமையில் இடம்பெற்ற இந்த விசேட கூட்டத்தில் காற்றாலை நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கலந்துரையாடலின் போது இனிவரும் காலங்களிலே மன்னார் தீவிற்குள் காற்றாலை அமைத்தல் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் அதற்கு அனுமதி அளிக்கக்கூடாது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும் நகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நகர சபையின் அனுமதியின்றி எந்த ஒரு அமைப்புகளோ அல்லது காற்றாலை நிறுவனங்களோ, வீதிகளைப் புனரமைக்கவோ கட்டடங்களை அமைக்கவோ இயலாது. அவ்வாறு அமைப்பதற்கு எதிரான ஒரு சட்ட நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஏக மனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.




இந்தக் கலந்துரையாடலில் நகர சபையின் 12 உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இந்த விசேட கலந்துரையாடலின் பின் நகர சபை தவிசாளர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

காற்றாலை மின்சார திட்டம் இனிவரும் காலங்களில் இந்த மன்னார் தீவினில் இடம்பெற அனுமதி அளிக்க கூடாது என்ற நோக்கத்தில் குறித்த விசேட கலந்துரையாடல் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அதற்கு அமைவாக நாங்கள் சில தீர்மானங்களை மேற்கொண்டுள்ளோம்.

மேலும், நிறுவனங்கள் தங்கள் வேலைகளுக்கு மக்களின் அனுமதியைப் பெறுவதற்காக கபடத்தனமாக வீதிகளை அமைத்துக் கொடுத்தல், நிவாரணங்களை வழங்குதல், மைதானங்களை சீர் செய்து கொடுத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வருகின்றன.

இங்கே மக்கள் அவதானமாக விழிப்புணர்வுடன் செயற்பட வேண்டும். அவர்கள் ஐந்து ரூபா கொடுத்துவிட்டு 5 லட்சத்தை எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பதை மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே நான் ஊடகங்கள் வாயிலாக மக்களை கேட்டுக் கொள்வது உங்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்கும் விடயங்களில் நீங்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்பதுதான்.- என்றார்.





# மீள்குடியேற்ற அமைச்சின் கீழ் வீட்டுத் திட்டங்களுக்கான அடிக்கல்

(சர்ஜூன் லாபீர்)

சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட மீள்குடியேற்ற கிராம சேவகர் பிரிவுகளில் இவ் வருடம் தெரிவு செய்யப்பட்ட 08 பயனாளிக்களின் வீடுகளுக்கான அடிக்கல் நடும் நிகழ்வும், வீடு கட்டுவதற்கான அனுமதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வும் சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா அவர்களின் தலைமையில் மல்வத்தை கிராம சேவகர் பிரிவில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஏ முனாசீர் கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் சம்மாந்துறை பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் முஹம்மது அஸ்லம், மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.அற்புதன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ ரக்கீபா, எம்.என்.எம் சசீர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஏ.ஜே.எம் ரிஸ்வான், கிராம சேவகர் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் பயனாளிகளும் கலந்து கொண்டனர்.

இவ் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் தலா 1.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் 4 வீடுகளும் தலா 0.9 மில்லியன் நிதியில் 4 வீடுகளும் அமைப்பதற்கு அமைச்சு மட்டத்தில் அனுமதி வழங்கப் படமை குறிப்பிடத்தக்கது



# முடிவில்லாது தொடரும் துயரம்:

# காசா பேரவலமும் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையும்!

- நவீனன்

(இன்று காசாவில் நிகழ்வது போல அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிறுத்தாமல் உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், போரை தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது.)

இன்று காசாவில் நடப்பது (Genocide by Starvation) பட்டினியின் மூலமான இனப்படுகொலை. இஸ்ரேலிய அரசு காசாவுக்கு உணவை அனுப்ப விடாது தடுப்பது ஒரு இனப்படுகொலை. இன்றைய காசா போல அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழ்ந்தது. முள்ளிவாய்க்கால் அதுவொரு காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

தொடரும் வான்வழித் தாக்குதல்கள், மறுபுறம் உணவு, உயிர் உத்தவாதம், மருத்துவ வசதிகள் இன்றி பச்சிளங் குழந்தைகள் உட்பட பாலஸ்தீன மக்களின் பரிதாப நிலை பாரிய அவலமாகியுள்ளது. இதே போலவே அன்று, கொத்துக் கொத்தாய் கொன்றழிக்கப்பட்ட தமிழ் மக்களின் குருதி படிந்து சிவந்த நிலமே முள்ளிவாய்க்கால். பல ஆண்டுகளாக தம் இருப்புக்காய் இனத்தின் விடுதலைக்காய் போராடிய ஒரு இனக்கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாய் கொத்துக் குண்டுகளுக்கும் எறிகணைகளுக்கும் இரையாக்கப்பட்ட 2009 மே 18 நாளாகும்.

முள்ளிவாய்க்கால் மண்ணும் மே 18 ஆம் நாளில் ஈழத்தமிழர் வாழ்வில் இருந்து மறக்கவும் மன்னிக்கவும் முடியாத ஒன்றாய் இதனாலேயே தன்னை வரலாற்றில் நிலைநிறுத்திக் கொண்டது.

### காசாவில் மனிதப் பேரவலம்

அன்று 2009இல் முள்ளிவாய்க்காலில் பாரிய மானுடப் பேரவலம் நிகழும் போது உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. ஆயினும் இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், அப்பாவி பாலஸ்தீன மக்களின் இழப்பை தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை



பார்க்க வேண்டிய நிலையில் உள்ளது. இந்த இரு காசா – முள்ளிவாய்க்கால் பேரவலம் , காலப் பெருந்துயரம் என்றே வரலாற்றில் பதியப்படும்.

தீவிரமாக இஸ்ரேல் நடத்தி வருகின்ற ஆகாய மார்க்கமான தாக்குதல்களால் காசாவில் இதுவரை ஏற்பட்டுள்ள மனிதப் பேரவலங்கள் வார்த்தையில் வடிக்க முடியாதவையாக உள்ளன. குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி பல்லாயிரக்கணக்கான சாதாரண மக்கள் மடிந்துள்ளனர். உயிரிழப்புகள் தொடர்ந்து கொண்டேயிருக்கின்றன. உலகின் பல நாடுகள் பெரிதும் கண்டித்தும் கவலையடைந்தும் உள்ளன.

தொடரும் மோதல்களால் காசாவில் பத்து லட்சம் குழந்தைகளின் உயிர்கள் உத்தரவாதமின்றி இருப்பதாக சர்வதேச குழந்தைகளை பாதுகாக்கும் (ளுயஎந வாந ஊாடைனசநn) தன்னார்வ அமைப்பு கூறியுள்ளது.

### மருத்துவமனைகள் மீது தாக்குதல்

அத்துடன் மருத்துவமனைகளில் அனைத்தும் அழிக்கப்பட்டுள்ளதால் பலருக்கும் சிகிச்சை அளிக்க முடியா நிலையே ஏற்பட்டுள்ளது. மருந்துப் பொருட்கள் பற்றாக்குறை நீடிக்கும் பட்சத்தில் உயிரிழப்புகள் மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. 50,000 கர்ப்பிணிகள் போதிய மருத்துவ உதவிகள் இல்லாமல் தவிக்

தொடர்ச்சி▼

# காசா பேரவலமும் முள்ளிவாய்க்கால் இனப் படுகொலையும்!

**தொடர்ச்சி▲**

கிறார்கள் என இந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஒருபுறம் மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காசா மக்களும் குழந்தைகளும் இருபெரும் சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு காசாவில் பசிக் கொடுமையால் இருக்கின்றனர்.

காசா சுகாதாரத்துறை தகவலின் படி, அங்கு சுமார் 60000 பேர் உயிரிழந்து இருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த எண்ணிக்கை இதனைவிட அதிகமென்றே தெரிவிக்கப்படுகின்றது. இந்த இழப்புகளை நிறுத்தக் கோரியும், இஸ்ரேல் மீதே உலகநாடுகள் பலவும் குற்றம் சுமத்துகின்றன.

**கொத்துக் கொத்தாய் கொல்லப்பட்ட தமிழர்**

2008 இன் இறுதிப் பகுதியிலும், 2009 ஆரம்பத்திலும், ஈழப்போரின் இறுதிக் கட்டத்தில் இலங்கை அரச படைத்துத் துறையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே கடும் போர் நடைபெற்றது.

மேற்குலகின் உதவியுடன் அதி நவீன ஆயுதங்கள் இரக்கமே இல்லாது முள்ளிவாய்க்கால் மண் மீது வீசப்பட்டது. அண்டை நாடு முதல் ஐ.நா. சபை வரை வேடிக்கை பார்த்து நிற்க பேரினவாத அரசின் கொடூர வன்செயலால் பிஞ்சுக் குழந்தை முதல் வயதானவர்கள் வரை குரல்வளை நசிக்கப்பட்டும் உயிரோடு புதைக்கப்பட்டும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டும் கொல்லப்பட்டிருந்தனர்.

தமிழீழ தனிநாடு விடுதலை கோரி 1956 இலிருந்து அகிம்சைப் போராட்டங்களிலும், பின்னர் 2009 வரை ஆயுதப் போராட்டத்தின் இறுதிக்கட்டம் முள்ளிவாய்க்காலில் பாரிய மனிதப் பேரழிவுடன் தமிழர்களின் ஈழப்போராட்டம் மௌனிக்கப்பட்டது.

இத்தனைக்கும் தமிழ் பேசும் மக்கள் கேட்டது அவர்கள் நிலம் அவர்களுக்கு வேண்டும் என்பதேயாகும். இதை ஏற்க மறுத்த பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களை மேற்குலகின் துணையோடு இரக்கமே இல்லாமல் முள்ளிவாய்க்காலில் அழித்தொழித்தது.

இன்றைய காசா நிலவரமும் தமிழர்கள் சொந்த நிலங்களில் இருந்து விரட்டப்பட்டமை போல பாலஸ்தீனர்களுக்கும் ஏற்பட்டுள்ளது.

**பல்லாயிரம் குழந்தைகள் உயிரிழக்கும் அபாயம்!**

இதேவேளை ஐந்து நிமிடத்துக்கு ஒரு பாலஸ்தீன குழந்தை மரணிப்பதாக மத்திய கிழக்கு ஆசியாவை கொண்டு இயங்கும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன. இதுவரையில் கொல்லப்பட்டவர்களில் நாற்பது சதவீதமானோர் குழந்தைகள் என காசாவின் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காசா மருந்துகளின் தட்டுப்பாடு, மறுபுறம் இஸ்ரேலிய இராணுவத்தின் தொடர்ச்சியான தாக்குதல் என காசா மக்களும் குழந்தைகளும் பாரிய சிக்கல்களுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காசாவில் இருக்கின்றனர்.

**போர்க்குற்றமும் இனப்படுகொலையும்**

இஸ்ரேல் தற்போது பாலஸ்தீனத்தில் நடாத்தும் போரை பல்வேறு நாடுகளும் கண்டித்து, போர்க்குற்றமாக



வெளிப்படுத்தி உள்ளனர். ஆயினும் ஈழத்தில் போரின் இறுதிக் கட்டத்தில் ஏறத்தாழ 40,000 பொதுமக்கள் வரை இறந்தனர் என ஐக்கிய நாடுகளின் அறிக்கை தெரிவித்தது. இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாடற்ற ஏவுகணைத் தாக்குதல்களில் அகப்பட்டு இறந்தனர் என அவ்வறிக்கை தெரிவித்தது.

தமிழர் மீதான போர்க்குற்றங்கள் இழைத்தன என்று இலங்கை அரசு மீது குற்றம் சாட்டப்பட்டது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையம் இலங்கை அரசு இழைத்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை தற்போது விசாரணைக்கு உட்படுத்தி இருந்தாலும் கொல்லப்பட்ட, காணாமல் போன தமிழர்களுக்கு இது வரை நீதி கிடைக்கவில்லை.

ஈழத்தில் முள்ளிவாய்க்காலில் நிகழ்ந்த கோர நிகழ்வுகளைப் போலவே,இராணுவ முற்றுகைக்குள் காசா முடங்கி,இஸ்ரேலின் போர் குற்றம் தொடர்கிறது. உலகின் மனச்சாட்சியும் மௌனித்திருக்க, ஐ.நா. சபையின் தோல்வியை வெளிப்படுத்தும் வண்ணம் இஸ்ரேலின் கோரத் தாண்டவம் அரங்கேறுகிறது.

அன்று முள்ளிவாய்க்காலிலும், இன்று காசாவிலும் நிகழும் இனப்படுகொலை பேரவலமானது முடிவிலா தொடர்கின்றது. அப்போது முள்ளிவாய்க்கால் பேரவலத்தை நிறுத்தாமல் உலகம் கண்மூடி மௌனித்திருந்தது. ஆனால் இன்றைய காசா பேரவலத்தை உலகம் கண்டித்தாலும், போரை தடுக்க முடியாமல் கைகட்டி வேடிக்கை பார்க்க வேண்டிய நிலையில் உள்ளமை கவலைக்குரியதே.

பதினாறு ஆண்டுகளுக்கு முன்பு அன்று ஸ்ரீலங்கா அரசு தமிழர் தாயகத்தில் பட்டினியின் மூலமாகவும் இனப் படுகொலையை செய்திருந்தது. அன்று எமக்கான நீதியை தருவதற்கு சர்வதேசம் தயாராக இருக்கவில்லை.

தமிழினத்தின் மீது இழைக்கப்பட்டதும், இழைக்கப்பட்டு வருவதுமான இனப்படுகொலைக்கு சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றினூடாக சர்வதேச விசாரணை ஒன்றை கோருவதன் மூலமாகவே தமிழினம் தன்னை பாதுகாத்துக்கொள்ளக்கூடிய வகையிலான சுயாட்சி கட்டமைப்பை நிறுவிக்கொள்ள முடியும்.

பாலஸ்தீன மக்கள் பெரும் அவலங்களின் பின்னராக, தனியரசை நிறுவ சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன. தற்போது பிரான்சைத் தொடர்ந்து ஐக்கிய ராஜ்யமும் கனடாவும் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்க தயாராகியுள் என. அன்று தமிழர் தாயகத்தில் நடந்த இனப்படுகொலை போன்றே இன்று காசாவில் நிகழ்கிறது.

பாலஸ்தீன மக்களின் சுதந்திர தனியரசைச் சர்வதேசம் அங்கீகரிப்பது போல் தமிழர்களின் தாயகக் கனவும் ஓர் நாள் நிறைவேறும் அவாவில் தமிழ் மக்கள் உள்ளனர்.

# செம்மணி புதைகுழி தொடர்பில் சர்வதேச காணிப்பு வேண்டும்

## இந்திய நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் கோரிக்கை



செம்மணி மனித புதைகுழி குறித்து சுயாதீன சர்வதேச காணிப்புடனான விசாரணைக்கு இந்தியா பரப்புரை செய்யவேண்டும் என இந்திய நாடாளு மன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

செம்மணி மனித புதைகுழி குறித்து இந்திய நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு அனுமதி கோரி நாடாளு மன்றத்தின் கீழ்சபையின் செயலாளர் நாயகத்திற்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இந்த வேண்டு கோளை விடுத்துள்ளார்.

அந்த கடிதத்தில் அவர் மேலும் குறிப் பிடுகையில்,

“ஆறாம் திகதி இந்திய நாடாளு மன்றத்தில் இந்த விவகாரம் குறித்து உரையாற்றுவதற்கான அனுமதியை நான் கோருகின்றேன். எனக்கு அனுமதி யளிக்கப்பட்டால் பின்வரும் விடயங்கள் குறித்து நான் குறிப்பிடுவேன்.

இலங்கையின் வடபகுதியில் யாழ்ப் பாணத்தில் உள்ள செம்மணியில் சமீபத் தில் மனித புதைகுழிகள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளமை குறித்த தமிழ்நாட்டின் வேதனையை தெரிவிப்பதற்காக நான் இங்கு உரையாற்றுகின்றேன்.

மீட்கப்பட்ட மனித எச்சங்கள், இலங் கையின் தமிழ் சமூகத்தின் நீண்டகா யங்களை மீண்டும் கிளறியுள்ளன. இவற்றில் சில மோதல்களின் போது பலவந்தமாக காணாமலாக்கப்பட்டவர் களின் மனித எச்சங்கள் என்று கருதப் படுகின்றது.

பலதசாப்தங்களாகஇலங்கைத்தமிழர் கள் திட்டமிடப்பட்ட வன்முறைகள், பல வந்தமாக காணாமலாக்கப்படுதல் போன் றவற்றை எதிர்கொண்டுள்ளனர்.

அவர்களிற்கு நீதி மறுக்கப்பட் டுள்ளது. மனித புதைகுழி என்பது வெறு மனே ஒரு தடயவியல் இடம்மாத்திர மில்லை. இது மறைக்கப்பட்ட உண்மை தாமதிக்கப்பட்ட நீதிக் கான ஒரு குறி யீடு.

ஈழத்தமிழர்களுடன் கலாச்சார, மொழி உறவுகளை பகிர்ந்துகொண்டுள்ள தமி ழகமக்கள் தொடர்ந்தும் அலட்சியமாக இருக்க முடியாது.

இந்திய அரசாங்கம் உடனடியாக இந்த விடயத்தை இராஜதந்திர வட்டா ரங்கள் ஊடாக அணுக வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை அரசாங் கத்திடமிருந்து முழுமையான வெளிப் படை தன்மையை கோர வேண்டும்.

செம்மணி மனித புதைகுழி குறித்து சுயாதீன சர்வதேச கண் இந் தியா பரப்புரைசெய்யவேண்டும் மோதல் காணிப்புடனான விசாரணைக்கு நீதி நல்லிணக்கம் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளிற்கான தனது நீண்டகால நிலைப்பாட்டை இந்தியா மீள வலியு றுத்தவேண்டும்.

இந்தியா வெறுமனே பிராந்திய ஒத்துழைப்பு குறித்து மாத்திரம் குரல் கொடுக்க முடியாது. எல்லைக ளிற்கு அப்பால் தமிழ் மக்களின் கௌர வம் உண்மை நீதிக்காகவும் குரல் கொடுக்கவேண்டும்.” என்று தெரிவித் துள்ளார்.

# போலி வாக்காளர்களாலேயே தி.மு.க. வெற்றி பெறுகின்றது

## அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றச்சாட்டு





சென்னை மாநகராட்சி முழுவதும் போலி வாக்காளர்களால் மட்டுமே தி.மு.க. வெற்றி பெறுகிறது என்று அ. தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி குற்றம்சாட்டியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப் பாடி பழனிசாமி தனது ‘மக்களைக் காப் போம், தமிழகத்தை மீட்போம்’ பிரச்சாரப் பயணத்தில் நேற்று சாத்தூர் பஸ் நிறுத் தம் அருகே பொதுமக்கள் மத்தியில் உரையாற்றுகையில்,

“திமுகஆட்சிபொறுப்பேற்று50மாதங் களை கடந்துள்ளது. இந்த காலக்கட் டத்தில் சொல்லி கொள்ளும் அளவுக்கு உருப்படியான திட்டங்கள் எதுவும் செய்ய வில்லை. ஆனால் தமிழகம் வளர்ந்து விட்டது என்பது போன்ற தோற்றத்தை தி.மு.கவும், அதன் கூட்டணி கட்சிகளும் உருவாக்குகிறார்கள்.

இன்று வாக்காளர் பட்டியல் திருத்தத் துக்கு இ.பி.எஸ். வாய்த்திறக்காதது ஏன் என்று துரைமுருகன் கேள்வி கேட்கி றார். 86 வயதில் பொய்யான அறிக்கை வெளியிடுகிறார். இப்போது ஆட்சியில் இருப்பது திமுகதானே. அவர்களிடம் தானே அதிகாரம் இருக்கிறது. ஸ்டாலி னுக்குக் கீழே தானே அதிகாரிகள் உள் ளனர். ஸ்டாலின் உத்தரவின்பேரில், அமைச்சரின் கட்டுப்பாட்டில் தானே அவர் கள் செயல்படுகின்றனர். வாக்காளர் பட்டி யலில் பெயர் சேர்த்தல், நீக்கம் போன் றவை மாவட்ட ஆட்சியரின் பணி. அதில் இப்போது அதிமுக என்ன செய்ய முடியும்?

அ.தி.மு.க, பா.ஜ.க. கூட்டணி வைத்த தும் தி.மு.கவுக்குப் பயம் வந்துவிட்டது. அவர்களுக்கு வெற்றி பெற முடியாது என்று எண்ணம் வந்துவிட்டது. அத னால் தான் மடைமாற்றம் செய்கிறார். துரைமுருகன் அவர்களே, ஆட்சி உங் களிடம் உள்ளது, நீங்கள்தான் போலி வாக்காளர்களை சேர்க்கிறீர்கள். உண் மையிலேயே தைரியம் இருந்தால் நான் கேட்பதற்குப் பதில் சொல்லுங்கள். அவர் வயதில் மூத்தவர் என்பதால் மதிக்கி றோம். அதேநேரம், தவறான தகவல் வெளியிட்டால் நிச்சயம் கண்டிப்போம்.

சென்னை மாநகராட்சி முழுவதும் தி.மு.க. போலி வாக்காளர்களால் மட் டுமே வெற்றி பெறுகிறது. இது உண்மை. ஆதாரபூர்வமாக நீதிமன்ற உத்தரவின் பேரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று போலி வாக்காளர்களை நீக்கியுள்ளனர். இது தி.மு.கவின் பித்த லாட்டம் தானே? தி.மு.க. மக்களின் செல்வாக்கை இழந்துவிட்டது. அதனால் 2026 தேர்தலில் தி.மு.க. கூட்டணி படு தோல்வி அடையும்.

சென்னை மாநகராட்சித் தேர்தலில் கள்ள வாக்கு போட முயன்ற ஒருவரை முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பிடி- த்து பொலிஸில் ஒப்படைத்தார். ஆனால், அன்று ஒப்படைத்தவரை கைது செய்து, கள்ள வாக்கு போட்டவரை விடுவித் தார்கள். இப்படிப்பட்ட கட்சிக்கு எங்களைப் பற்றி விமர்சனம் செய்ய அருகதை கிடை யாது.

ஜெயலலிதா இருக்கும்போது சென்னை மாநகராட்சி தேர்தல் நடந்தது, அப்போது ஒன்றரை மணி நேரத்தில் 1,200 வாக்குகளை பதிவு செய்தார்கள். நீதிமன்றம் சென்றோம், ஒன்றரை மணி நேரத்தில் எப்படி இவ்வளவு வாக்குகள் பதிவாகும் என்று கேட்டு, முறைகேடு தேர்தலை ரத்து செய்தது நீதிமன்றம். கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்தியதி லும் முறைகேடு நடந்தது. தி.மு.க. அர சாங்கமே அந்த தேர்தலை ரத்து செய்து விட்டது.

இன்று ஊழல் இல்லாத துறையே இல்லை. எதற்கெடுத்தாலும் பணம் தான். ஊழலில் ஸ்டாலின் அரசுக்கு நோபல் பரிசு கொடுக்கலாம்.” என்றார்.



# வெனிசுலா ஜனாதிபதி மதுரோவை கைது செய்தால் 415 கோடி ரூபா

## சன்மானத்தை அறிவித்தார் டொனால்ட் ட்ரம்ப்

வெனிசுலா ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோவை கைது செய்வதற்கான சன்மானத்தை டொனால்ட் ட்ரம்ப் அரசு இரட்டிப்பாக்கி 415 கோடி ரூபாயாக அறிவித்துள்ளது.

வெனிசுலா மூன்றாவது ஜனாதிபதியான நிகோலஸ் மதுரோ, உலகின் மிகப்பெரிய போதைப்பொருள் கடத்தல்காரர்களில் ஒருவராகச் செயல்படுகிறார் எனவும் போதைப்பொருள் கும்பல்களுடன் இணைந்து அமெரிக்காவிற்குள் போதைப் பொருள்களை விநியோகம் செய்கிறார் எனவும் கடந்த 2020 ஆம் ஆண்டு ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார்.

அவருக்கு எதிராக மன்ஹாட்டன் கூட்டாட்சி நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.


அப்போது, நிக்கோலஸ் மதுரோவை கைது செய்ய உதவுவோருக்கு, 131 கோடி ரூபா பரிசுத்தொகை அறிவிக்கப்பட்டது.

பின்னர், ஜோ பைடன் அரசு அந்தத் தொகையை 200 கோடி ரூபாயாக உயர்த்திய நிலையில், இந்தத் தொகையானது இரட்டை கோபுர தாக்குதலுக்குப் பின் சர்வதேச பயங்கரவாதி ஒசாமா பின்லேடனைப் பிடிக்க அமெரிக்கா அறிவித்த பரிசுத்தொகைக்கு நிகரானதாகும்.

இவ்வளவு பெரிய பரிசுத்தொகை அறிவிக்கப்பட்ட போதிலும், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளின் எதிர்ப்புகளையும் மீறி மதுரோ பதவியில் நீடித்து வருகின்றார்.

இந்தநிலையில், தற்போது மதுரோவை கைது செய்வதற்கான சன்மானத்தை ட்ரம்ப் அரசு இரட்டிப்பாக்கி 415 கோடி ரூபாயாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 28 ஆண்டுகளுக்கு முன்னர் மாயமானவரின் சடலம் மீட்பு






28 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போன ஒருவரின் உடல் பாகிஸ்தானில் உள்ள ஒரு பனிப்பாறையில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

1997 ஜூன் மாதம் ஏற்பட்ட பனிச்சரிவின் போது அந்த நபர் ஒரு பள்ளத்தில் விழுந்து காணமாமல் போனார் என தெரிவிக்கப்படுகிறது.

விபத்து ஏற்பட்டபோது அவர் தனது சகோதரருடன் அந்தப் பகுதியில் குதிரை சவாரி செய்துக் கொண்டிருந்தார் என கூறப்படுகிறது.

அப்போது விழுந்தவரை தேடுவதற்கான மீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்று உயரிழந்தவரின் சகோதரர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், 28 ஆண்டுகளின் பின்னர் அவரின் உடலுக்கோ அல்லது ஆடைகளுக்கோ எந்த சேதமும் இல்லாமல் அப்படியே இருந்தவாறு மீட்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து தெரிவித்த இஸ்லாமாபாத்தில் உள்ள காம்சாட்ஸ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஒருவர், ஒரு உடல் பனிப்பாறையில் விழும்போது, கடுமையான குளிர் அதை விரைவாக உறைய வைத்து, சிதைவு செயல் முறையை நிறுத்தியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 03

கனடா முரசு

சனிக்கிழமை 09/08/2025

## இந்திய பெண் உயிரிழப்பு; குற்றவாளி ஒருவர் சிக்கினார்



கனடாவில் இரண்டு கும்பல்களுக்கி டையிலான மோதலின்போது தவறுதலாக குண்டு பாய்ந்து உயிரிழந்த இளம் பெண் விவகாரத்தில் 03

# மார்க்கம் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் ஒருவருக்கு நாடு தழுவிய பிடியாணை உத்தரவு



கனடாவில் ஒருவருக்கு நாடு தழுவிய அடிப்படையிலான பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மார்க்கம் பகுதியில் இந்த ஆண்டு ஆரம்பத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவம் தொடர்பில் மேற்படி நபர் தேடப்படுகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி 21 ஆம் திகதி மாலை 5:30 மணியளவில் லீ அவென்யூ மற்றும் நோபிள் ஸ்ட்ரீட் பகுதியில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 03



# கனடாவில் 51 அடி உயர ராமர் சிலை திறக்கப்பட்டது

கனடாவில் 51 அடி உயரம் கொண்ட இராமர் சிலை திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கனடாவின் மிசிசாகா நகரில் உள்ள Hindu Heritage Centre இல் இந்த இராமர் சிலை நிறுவப்பட்டுள்ளது.

வட அமெரிக்காவில் அமைக்கப்பட்டுள்ள இராமர் சிலைகளில் இதுவே இப்போது மிக உயரமான 03



# அமெரிக்காவைப் புறக்கணிக்கும் கனேடியர்கள் விடுமுறைக்காக அதிக பணம் செலவிடுகிறார்கள்

## ஆய்வறிக்கை ஒன்றில் தகவல்

ட்ரம்ப் நிர்வாகத்தை கண்டித்து அமெரிக்காவைப் புறக்கணிக்கும் கனேடியர்கள் தங்கள் விடுமுறைக்காக அதிக பணம் செலவிடுகிறார்கள் என ஆய்வறிக்கை ஒன்றில் தெரிய வந்துள்ளது.

கடந்த ஆண்டை ஒப்பிடுகையில் கனேடிய மக்கள் மற்ற நாடுகளுக்கு பயணம் செய்வதால் அதிக பணம் செலவிடும் சூழல் உருவாகியுள்ளது.

அர்ஜென்டினாவுகு கனேடியர்களின் பயணம் 148 சதவீதமும், ஜப்பானுக்கு 137 சதவீதமும், டென்மார்க்கிற்கு 114 சதவீதமும், குராக்கோவிற்கு 101 சதவீதமும் உயர்ந்துள்ளது.

அதுமட்டுமின்றி, அருபாவுக்கான பயணம் 71 சதவீதமும், போர்ச்சுகலுக்கு 61 சதவீதமும், ஸ்பெயினுக்கு 35 சதவீதமும் அதிகரித்துள்ளது.

கனடாவின் பொருளாதாரத்தின் மீதான ஜனாதிபதி ட்ரம்பின் தாக்குதல்களும், 51 ஆவது மாகாணமாக மாற்றுவதற்கான அச்சுறுத்தல்களும் கனேடிய மக்களை கோபப்படுத்தியுள்ளன, இதனால் அதிக எண்ணிக்கையில் அமெரிக்காவிற்கான பயணங்களை கனேடிய மக்கள் ரத்து செய்து வருகின்றனர்.

அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் இடையிலான வர்த்தகப் போர், தனது வருடாந்திர அமெரிக்க பயணத்தை ரத்து செய்யத் தூண்டியதாக ஆல்பர்ட்டாவில் வசிப்பவர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு லாஸ் வேகாஸ் பயணப்பட்ட அவர் தற்போது, பணம் அதிகம் செலவாகும் என்றாலும் பால்கன் நாடுகளுக்கு செல்ல திட்டமிட்டுள்ளார். அமெரிக்காவுக்கு அதிகம் பயணப்படும் மக்களாக கனேடியர்கள் இருந்துள்ளனர்.

கடந்த ஆண்டு மட்டும் 20.5 பில்லியன் டொலர் செலவிட்டுள்ளனர். ஆனால் ட்ரம்ப் விவகாரத்தை அடுத்து, கனேடியர்களின் அமெரிக்க விமான பயணம் 13.5 சதவீதம் சரிவடைந்தது. கார்களில் செல்லும் கனேடியர்களின் எண்ணிக்கை 30 சதவீதத்திற்கும் மேல் சரிவடைந்தது.

அமெரிக்க இடங்களுக்கான விமானங்களைக் குறைத்தும், மெக்சிகன் மாற்றுப் பயணங்களுக்கு அடிக்கடி செல்வதை அதிகரிப்பதன் மூலமும் விமான நிறுவனங்கள் தங்கள் பாதையை மாற்ற வேண்டிய கட்டாயத்தில் தள்ளப்பட்டன.






# கனடாவில் ஜூலை மாதத்தில் 41,000 வேலைவாய்ப்பு இழப்பு

கனடாவில் கடந்த ஜூலை மாதம் பொருளாதாரம் சுமார் 41,000 வேலை வாய்ப்புக்கள் இழக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கனடிய புள்ளிவிபரவியல் திணைக்களம் இந்த தகவல்களை வெளியிட்டுள்ளது. தனியார் துறைகளில் இளைஞர்கள் அதிகளவில் இந்த தொழில் வாய்ப்பு இழப்புக்களை எதிர்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புக்களை தேடுவோரின் எண்ணிக்கை ஜூன் மாதத்திலிருந்து சுமார் மாறாத நிலையில் காணப்பட்டதனால் வேலையின்மை விகிதம் 6.9 சதவீதமாக காணப்பட்டது.

கடந்த மாதத்தில் 51,000 முழுநேர வேலை வாய்ப்புக்கள் இழக்கப்பட்டன. இந்த இழப்புகளின் பெரும்பகுதி தனியார் துறையில் இருந்ததாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எனினும் கடந்த மாதம் வேலை இழப்புக்கள், அதற்கு முந்தைய ஜூன் மாதத்தில் பதிவான தொழில் வாய்ப்பு அதிகரிப்பினை ஈடுசெய்யும் வகையில் அமைந்ததினால் பாதிப்பு குறைந்துள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

## மார்க்கம் துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பெண் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது நிலை குறித்து மேலதிக தகவல்கள் வழங்கப்படவில்லை. மார்க்கம் பகுதியைச் சேர்ந்த 35 வயதான சாவ் சென் என்ற நபரே இந்த துப்பாக்கிச் சூட்டு சமபவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் தேடப்பட்டு வருகின்றார்.

கொலை முயற்சி உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த நபருக்கு எதிராக பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## கனடாவில் 51 அடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிலை என கூறப்படுகிறது.

இச்சிலை இந்தியாவின் அயோத்தியில் உள்ள ராம ஜென்மபூமி கோவிலில் உள்ள சிலையின் வடிவமைப்பில் ஈர்க்கப்பட்டு சிற்பி நரேஷ் குமார் கும்மாவத்தால் உருவாக்கப்பட்டதாகும்.

டெல்லியில் பல பாகங்களாக தயாரிக்கப்பட்ட இச்சிலை கனடாவின் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. மணிக்கு 200 கிலோ மீற்றர் வேகத்தில் வீசக்கூடிய காற்றையும் தாங்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சிலையின் உயரம் மட்டும் 51 அடி எனவும், 7 அடி உயரம் கொண்ட மேடையின் அளவு சேர்க்கப்படவில்லை என்றும், மேலும், எதிர்காலத்தில் கூடுதலாக கொடையொன்று இணைக்கப்படவுள்ளதாகவும் Hindu Heritage Centre தெரிவித்துள்ளது.

10,000 இற்கும் மேற்பட்ட மக்கள் கலந்துகொண்ட சிலையின் திறப்பு விழாவில் பேசிய மிசிசாகா மேயர் கரோலின் பாரிஷ், இது கனடாவில் வாழும் இந்து மத சமூகத்தினருக்கு சிறப்பான அடையாளம் என தெரிவித்துள்ளார்.

## இந்திய பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

புதிய தகவல் ஒன்று வெளியாகியுள்ளது.

இந்தியாவின் பஞ்சாபைச் சேர்ந்தவரான ஹர்சிம்ரத் (வயது 21) என்னும் இளம்பெண், கனடாவுக்குக் கல்வி கற்கச் சென்றிருந்தார்.

பகுதி நேர பணி செய்துவந்த ஹர்சிம்ரத், ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி இரவு 7.30 மணியளவில், ஹாமில்ட்டன் பகுதியில் பஸ்ஸுக்காக காத்திருந்திருக்கிறார்.

அப்போது அங்கு வந்த ஒரு கறுப்பு நிற காரிலிருந்த ஒருவர், வீதியின் மறுபக்கம் நின்றுகொண்டிருந்த ஒரு வெள்ளை நிற காரிலிருந்தவர்களை நோக்கி துப்பாக்கியால் சுட்டுள்ளார்.

அப்போது, அவர் சுட்ட ஒரு குண்டு, பஸ்ஸுக்காக காத்திருந்த ஹர்சிம்ரத்தின் மார்பில் பாய்ந்துள்ளது.

துப்பாக்கியால் சுட்டவர்கள் தப்பியோடிவிட, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட ஹர்சிம்ரத், காயங்கள் காரணமாக பலியாகிவிட்டார்.

இந்நிலையில், ஹர்சிம்ரத் உயிரிழக்கக் காரணமாக இருந்த நபர் செவ்வாயன்று கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கனடாவின் ஒன்ராறியோவிலுள்ள நயாகரா ஃபால்ஸ் என்னும் இடத்தில் கைது செய்யப்பட்ட அந்த நபரின் பெயர் ஜெர்டைன் ஃபோஸ்டர் (வயது 32).

அவர் மீது ஒரு கொலைக்குற்றச்சாட்டும், மூன்று கொலை முயற்சிக் குற்றச்சாட்டுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.